**சாட்சிகளின் வாக்குமூலம்.**

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 ( I) உ.வி.மு.ச. பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி.**

**அசல் வழக்கு எண்.246/2009**

| | | | | |
|---|---|---|---|---|
| வாக்குமூலம் | - **வா.சா.1** | தொடங்கும் நேரம் | : | 12.51 p.m. |
| | | முடிவுறும் நேரம் | : | 01.10 p.m. |
| பெயர் | : **காளிதாஸ்** | மதம் | : | -- |
| த/பெ. | : **கோவிந்தன்** | தொழில் | : | -- |
| கிராமம் | : **வெளியம்பாக்கம்** | வயது | : | **66** |
| தாலுக்கா | : **வந்தவாசி** | நாள் | : | **07-11-2025** |

1987ஆம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் **07**ஆம் நாள் சாட்சியம்.

**முதல் விசாரணை**

இந்த வழக்கில் 1ம் வாதியாவேன். எனது முதல் விசாரணைக்காக சாட்சிய சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. கீழ்கண்ட ஆவணங்கள் என் தரப்பில் தாக்கல் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **01.** | **29.11.2006** | **தேதியிட்ட லட்சுமணன் என்பவர் 2ம் வாதி சீனுவாசன் பெயரில் எழுதிக் கொடுத்த கிரய ஆவணம் - அசல்** | **வா.த.சா.ஆ.1.** |
| **02.** | **04.02.2002** | **தேதியிட்ட தெய்வானை அம்மாளுக்கு காளிதாஸ் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் - அசல்.** | **வா.த.சா.ஆ.2.** |
| **03.** | **12.11.2009** | **தேதியிட்ட 2ம் வாதி சீனுவாசனுக்கு காளிதாஸ் எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் - அசல்.** | **வா.த.சா.ஆ.3.** |
| **04.** | **11.11.2005** | **தேதியிட்ட வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தில் வழங்கப்பட்ட நோட்டிஸ். - அசல்.** | **வா.த.சா.ஆ.4.** |
| **05.** | **03.02.2006** | **தேதியிட்ட புதுமனை புகுவிழா அழைப்பிதழ் - அசல்.** | **வா.த.சா.ஆ.5.** |

| | | | |
|---|---|---|---|
| **06.** | **26.11.2009** | **தேதியிட்ட 1ம் வாதி காளிதாஸ் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது - அசல்.** | **வா.த.சா.ஆ.6** |
| **07.** | **26.11.2009** | **தேதியிட்ட தெய்வானை பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது - அசல்.** | **வா.த.சா.ஆ.7** |
| **08.** | **16.11.2009** | **தேதியிட்ட 1ம் வாதி காளிதாஸ் பெயரில் உள்ள மின் கட்டண ரசீது - அசல்.** | **வா.த.சா.ஆ.8** |
| **09.** | **--** | **10.10.2008, 14.05.2009, 13.03.2008 தேதிகளிட்ட தெய்வானை அம்மாள் பெயரில் உள்ள மின் கட்டண ரசீதுகள் - எண்ணிக்கை-3 - அசல்.** | **வா.த.சா.ஆ.9** |
| **10.** | **12.11.2009** | **தேதியிட்ட 3ம்பிரதிவாதி செல்வம் என்பவருக்கு 1,2 பிரதிவாதிகள் கோபாலகிருஷ்ணன், முனியாண்டி எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.10** |
| **11.** | **29.10.2009** | **தேதியிட்ட 1ம் வாதியின் தகப்பனார் கோவிந்தன் பெயரில் உள்ள சிட்டா. (பட்டா எண்.1158) - உண்மை நகல்.** | **வா.த.சா.ஆ.11** |

மேற்படி **வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.11** வரையிலான ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றன. **வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.11 வரையான ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.** தாவாப்படி தீர்ப்பாகும்படி வேண்டிக்கொள்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.